# தருமபுரி, கிருஷ்ணகிரி மக்கள் தொடர்பு முகாமில் 355 பேருக்கு ரூ.1.63 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவி: கலெக்டர்கள் சாந்தி, கே.எம்.சரயு வழங்கினர்

கிருஷ்ணகிரி, செப். 13–

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பெண்டரஅள்ளி 1 கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் கலெக்டர் கே.எம்.சரயு தலைமையில் நடைபெற்றது.

முகாமில் அரசு துறைகள் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவது குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பொதுமக்களுக்கு நேரடியாக எடுத்துரைத்தனர்.

தொடர்ந்து, 154 பேருக்கு ரூ.81 லட்சத்து 74,083 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் கே.எம்.சரயு வழங்கினார். முன்னதாக, அவர் அரசு துறைகள் மூலம் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) சி.பன்னீர்செல்வம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் பத்மலதா, மாவட்ட சமூக நல அலுவலர் சக்தி சுபாஷினி, உதவி இயக்குநர் (நில அளவை) ராஜ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் கீதா ராணி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன், தாட்கோ மாவட்ட பொது மேலாளர் கே.எஸ். வேல்முருகன், போச்சம்பள்ளி வட்டாட்சியர் மகேந்திரன், துணை வட்டாட்சியர்கள் கங்கை, ரஹமத் உல்லா, லதா, சுகேந்திரன், பாரதி, காவேரிப்பட்டிணம் வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரியில் கலெக்டர் கே.எம்.சரயு



தருமபுரியில் கலெக்டர் சாந்தி

**தருமபுரி**

ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கௌரவ் குமார், வருவாய் கோட்டாட்சியர் இரா.காயத்ரி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, ஏரியூர் ஒன்றியக் குழு தலைவர் பழனிசாமி, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மயில்சாமி, பச்சியம்மாள், கலெக்டரின் இலட்சமி, பென்னாகரம் தனி வட்டாட்சியர் (ச.பா.தி) கி.ஆறுமுகம், வட்டார வளர்ச்சி அலுவலர் கல்பனா, மஞ்சாரஅள்ளி ஊராட்சிமன்றதலைவர் மாணிக்கம் உட்பட அனைத்து துறை மாவட்ட அளவிலான முதல் நிலை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




# கதிர் கலை அறிவியல் கல்லூரி சார்பில் தாத்தா பாட்டி தினம்

கோவை, செப். 13–

கதிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் செயல்பட்டு வரும் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக உலக தாத்தா பாட்டி தினம் அவினாசியில் செயல்பட்டு வரும் சீட் மூத்தோர் இல்லத்துடன் இணைந்து கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியானது தாத்தா பாட்டிகளைப் போற்றி வணங்க வேண்டும், அவர்கள் மீது அன்பும் அக்கறையும் செலுத்த வேண்டும் என்கிற கருத்தாக்கத்தை முன்னிறுத்தி நிகழ்த்தப்பட்டது.

மேலும் அவர்களின் பழைய நிகழ்வுகளையும், பழங்கதைகளையும் கேட்டு ரசித்ததோடு மட்டுமல்லாமல் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரியில் முதல்வர் கற்பகம் கலந்து கொண்டு பெரியோர்களின் ஆசியினையும் அன்பினையும் பெற்றுக் கொண்டதுடன் அவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கி சிறப்பு செய்தார்.

இந்நிகழ்வில் சீட் அமைப்பின் நிறுவனர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள் மாணவ மன்றம், விளையாட்டுத்துறை உறுப்பினர்கள் மற்றும் மீடியா டீம் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். இந்நிகழ்ச்சியினை நலப் பணித்திட்ட அலுவலர் பொ.பிரகாஷ் ஏற்பாடு செய்திருந்தார்.

# ரியல்மி நிறுவனத்தின் நார்ஸோ 70 டர்போ 5ஜி ஸ்மார்ட்போன், இயர்பட்ஸ் அறிமுகம்

கோவை, செப். 13–




ரியல்மி டர்போ பெர்பார்மென்ஸ் கொண்ட நார்ஸோ 70 டர்போ 5ஜி ஸ்மார்ட்போனை அறிமுகப்படுத்துகிறது.

இந்திய இளைஞர்களிடையே மிகவும் பிரபலமான ஸ்மார்ட்போன் பிராண்டான ரியல்மி, ரியல்மி நார்ஸோ 70 டர்போ 5ஜி மற்றும் ரியல்மி பட்ஸ் N1 ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. இது கூடவே ரியல்மி பட்ஸ் N1 – ஐயும் அறிமுகப்படுத்துகிறது. இதன் விலை முறையே ரூ.14,999 மற்றும் ரூ.1,999 முதல் தொடங்குகிறது. இளம், தொழில்நுட்ப ஆர்வலரான நுகர்வோருக்கு டர்போ கான்செப்டை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு உத்திசார்ந்த செயல்தான் இந்த புதிய ரியல்மி நார்ஸோ 70 டர்போ 5ஜி இன் அறிமுகம். புதுமையான டர்போ தொழில்நுட்பத்தில் செயல்படும் இந்த ஸ்மார்ட்போன், பவருக்கு முன்னுரிமை கொடுக்கிறது. அதாவது பேட்டரி சார்ஜ் தீர்ந்து போகமால் அதிக நேரம் நீடிக்க செய்யும். புதிய டர்போ தொழில்நுட்பம் நல்ல ப்ராசஸிங் வேகம் மற்றும் சிறந்த பயனர் அனுபவத்தை உறுதி செய்கிறது என்று ரியல்மி செய்தித் தொடர்பாளர்தெரிவித்தார்.

இயர்பட்ஸ் 3600 டிகிரி ஸ்பேஷியல் ஆடியோ எபெக்ட்டையும் கொண்டுள்ளது.

இயர்பட்ஸில் உள்ள சிப்செட் இன்டிபென்டன்ட் கம்ப்யூட்டிங்கைக் கொண்டுள்ளது, சுயஆராய்ச்சி செய்யப்பட்ட ஸ்பேஷியல் ஆடியோ அல்காரிதம் மூலம், எச்ஆர்டிஎப் ஹெட் பங்க்ஷன் மாடலை அடிப்படையாகக் கொண்டு, 360 டிகிரி சரவுண்ட் ஒலி அனுபவத்தை உருவாக்க ஒலிக்கான சரவுண்ட் சவுண்ட் பீல்டை வழங்குகிறது, இது தியேட்டரில் இருப்பது போன்ற அனுபவத்தை உருவாக்குகிறது.


## பொது அறிவிப்பு

கோட்டக் மஹிந்திரா வங்கி லிட் (KMBL) ஆகிய நாங்கள், எமது வங்கியியல் மற்றும் தொடர்புடைய பிற வணிக நடவடிக்கைகளை அதாவது ஏதேனும் ஒரு கிளை/அலுவலகம் திறப்பது ஆகியவற்றின் பொருட்டு வேண்டிய குத்தகை/சொத்து குறிப்பாக கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் கண்டதும், **திரு. யுவராஜா.M**, த/பெ. திரு. V.மனோகரன், வசிப்பிட முகவரி, எண்.66E, மொய்தீன் வீதி, ஈரோடு – 638 001, தமிழ்நாடு என்பவருக்குச் சொந்தமான சொத்தின் மீது மேற்கொள்ளவுள்ளோம். இந்த தெரிவிக்கப்பட்ட சொத்தானது வேறு எந்த நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிலும் அடமானம் வைக்கப்படவில்லை என உரிமையாளர் உறுதி கூறியுள்ளார்.

பொதுவாக பொதுமக்களுக்கும் மற்றும் தனி நபர்கள், அரசு/அரசு சார்பு நிறுவனங்கள், குழுக்கள்/ஆணையங்கள் ஆகிய சம்பந்தப்பட்ட அனைவருக்கும், கீழ்குறிப்பிட்ட சொத்தின் மீதான ஏதேனும் உரிமை, உரிமை ஆவணம், ஈடுபாடு அல்லது சொத்தின் மீதான பங்கு உரிமை உள்ள எந்த ஒரு நபரும், இந்தப் பரிமாற்றம் குறித்து ஏதேனும் மறுப்புத் தெரிவிக்க விரும்பினால், அவர்கள் தங்களது மறுப்பினை அதற்கான அனைத்து ஆதார ஆவணங்களின் நகல்களுடன் இந்த அறிவிப்பு வெளியான ஏழு தினங்களுக்குள் தங்களது மறுப்பினை எழுத்துபூர்வமாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு குறிப்பிட்ட அறிவிப்பு வெளியிடப்பட்ட ஏழு தினங்களுக்குள் கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலருக்கு அனைத்து ஆதார ஆவணங்களுடன் எழுத்து மூலமான மறுப்பு கிடைக்கப்பெறவில்லையெனில் மேற்படி குறிப்பிட்ட சொத்துக்களின் உரிமை ஆவணங்கள் முறையாக உள்ளன எனக் கருதப்படுவதுடன், மேற்குறிப்பிட்ட நபர்கள் தங்களது உரிமைகளை உதறி விட்டதாகக் கருதப்படும் என்பதோடு அத்தகைய நபர்கள் அது முதற்கொண்டு எந்த ஒரு மறுப்பையும் தெரிவிப்பதிலிருந்து புறந்தள்ளப்படுவார்கள் எனவும் மேலும் நாங்கள் மேற்படி நிலத்தில் குத்தகை ஒப்பந்தம் அல்லது அத்தகைய பிற ஒப்பந்தங்களை நிறைவேற்றும் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதுடன், அத்தகைய நபர்கள் யாராயிருப்பினும் இந்தப் பரிமாற்றம் தொடர்பாக வருங்காலத்தில் எந்த ஒரு மறுப்பினையும் தெரிவிப்பது ஏற்கப்படாது எனவும் தெரிவிக்கலாகிறது.

**சொத்தின் அட்டவணை**

காவேரி ரோடு, கருங்கல்பாளையம், ஈரோடு – 638 003, தமிழ்நாடு விலாசத்தில் ஜோயாலுக்காஸ் ஜுவெல்லரி எதிரில் தற்போது அமைந்த, ஈரோடு டவுன், டவுன் சர்வே எண்.26 பகுதி, மறு சர்வே வார்டு-D, பிளாக் எண்.12 ல் உள்ள அலுவலக வளாகமான வணிகச் சொத்து, மனை எண்.C மீதமைந்த (அ) 1100 சதுர தளப் பரப்பிலான தரைத் தளம் மற்றும் (ஆ) 1100 சதுரடி தளப் பரப்பிலான முதல் தளம் ஆக மொத்தம் 2200 சதுரடி தளப் பரப்பு கொண்ட கதவு எண்.182/10, 182/11, 182/12, 182/13, 182/14 மற்றும் 182/15, நிலத்தின் மொத்த பரப்பு 1515 சதுரடிக்குள் அமைந்த கட்டிடம்.

**சட்டத்துறை, கோட்டக் மஹிந்திரா வங்கி லிட்**
கோட்டக் இன்ஃபினிடி, 5வது மாடி, கட்டிட எண்.21, இன்ஃபினிடி பூங்கா
வெஸ்டன் எக்ஸ்பிரஸ் ஹைவே அடுத்து, ஜெனரல் A K வைத்யா மார்க்
மலாட் (கிழக்கு), மும்பை – 400 097. போன் : +91 22 66055570 / 5549 / 5544
1. rajarshi.chatterjee@kotak.com 2. sathishs.kumar@kotak.com
3. prema.a@kotak.com



## kotak Kotak Mahindra Bank கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G– பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 2வது தளம், ஸ்ரீனிவாஸ் பவன், அவினாசி சாலை, கோயம்புத்தூர் 641 018

### அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு.**

பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட் (இனி "BFL" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 25.11.2022 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி "வங்கி/கேஎம்பில்/ஈடுபெற்ற கடன் வழங்கியவர்" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.421LAP14339632ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி **திரு. எஸ். வெங்கடேசன் மற்றும் திருமதி. வி. சங்கீதா** ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 12.09.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.1,80,06,421/– (ரூபாய் ஒரு கோடியே எண்பது லட்சத்து ஆறாயிரத்து நானூற்று இருபத்தொன்று மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

| விவரங்கள் | விவரங்கள் |
|---|---|
| ஏலத் தேதி | 30.09.2024 |
| ஏலம் நடைபெறும் நேரம் | மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் |
| ரிசர்வ் விலை | **ரூ.58,50,000/-** (ரூபாய் ஐம்பத்தெட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |
| டேவணித் தொகை டெபாசிட் (EMD) | **ரூ.5,85,000/-** (ரூபாய் ஐந்து லட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்) |
| Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 27.09.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி) |

**ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் : அயிட்டம் எண்.1:** நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுக்கா, சரவணம்பட்டி கிராமம், எஸ்.எப். எண்.224, பஞ்சர் கடை தெருவில் உள்ள 979 சதுர அடி வீட்டு மனை மற்றும் பாதை உரிமை, இதில் உள்ள 88 சதுர அடி நடை பாதை நிலம் உள்ளிட்ட மொத்தம் 1067 சதுர அடி நிலம். நிலத்தின் எல்லைகள் : மேற்கில் தெற்கு வடக்காக சாலை, கிழக்கில் பத்ருதீனுக்கு சொந்தமான சொத்து, தெற்கில் தேவன்ன கவுண்டர் சொத்து மற்றும் வடக்கில் சரவணன் மற்றும் பத்ருதீனுக்கு சொந்தமான சொத்து மற்றும் 4 அடி அகல நடைபாதை.

**அயிட்டம் எண்.2 :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுக்கா, சரவணம்பட்டி கிராமம், எஸ்.எப். எண்.224, பஞ்சர் கடை தெருவில் உள்ள 1023 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட வீட்டு மனை மற்றும் பாதை உரிமை, இதில் உள்ள 88 சதுர அடி நடை பாதை நிலம் உள்ளிட்ட மொத்தம் 1111 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். நிலத்தின் எல்லைகள் : மேற்கில் சரவணனுக்கு சொந்தமான சொத்து மற்றும் 4 அடி பாதை, கிழக்கில் தெற்கு வடக்காக சாலை, தெற்கில் தேவன்ன கவுண்டருக்கு சொந்தமான சொத்து, வடக்கில் ராமாத்தாள் அவர்களுக்கு சொந்தமான சொத்து. அயிட்டம் எண். 1 மற்றும் 2ன் மொத்த விஸ்தீரணம் நடை பாதை உரிமையுடன் சேர்த்து 2178 சதுர அடி நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள ஆர்சிசி கட்டிடம்.

தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விக்னேஷ் எஸ் (+91 9092919036) & திரு. விஜய்குமார் மேனன் (+91 9940572248).** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751)ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

**இடம் : கோயம்புத்தூர், தேதி: 13.09.2024** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**




# அந்தியூர் அரசு பெண்கள் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிட பணிகள்

## வெங்கடாசலம் எம்எல்ஏ பூமிபூஜை

ஈரோடு, செப். 13–

ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்ற தொகுதி அந்தியூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நபார்டு நிதியில் இருந்து 1 கோடியே 12 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் அமைக்கும் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம் பூமிபூஜை செய்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், பேரூர் கழக செயலாளர் காளிதாஸ், ஈரோடு வடக்கு மாவட்ட விவசாய அணி மாவட்ட துணை அமைப்பாளர் விவேகம் பாலுச்சாமி, பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் பழனிசாமி, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் நாகராஜ், வார்டு செயலாளர்கள் ஜீவானந்தம் முத்து மற்றும் காவேரி பழனிசாமி, செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனைத்து துறைகள் சார்பில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியது குறித்து புகைப்படங்கள் மூலம் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்படக் கண்காட்சி கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஜெ.காருப்பள்ளி ஊராட்சி, வெங்கடாபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்டது. இதனை 300க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர்.



# திருப்பூர் தெற்கு குறுமைய அளவிலான தடகள போட்டியில் தி ப்ரண்ட்லைன் பள்ளி சாதனை

திருப்பூர், செப். 13–

திருப்பூர் தெற்கு குறுமைய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் ப்ரண்ட்லைன் அகாடமி பள்ளி மாணவர்கள் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தனர்.

திருப்பூர் தெற்கு குறுமைய அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் திருப்பூர் டீ பப்ளிக் பள்ளியில் நடைபெற்றது. சுமார் 40 பள்ளிகள் பங்கேற்ற இப்போட்டிகளில் ப்ரண்ட்லைன் பள்ளி மாணவ, மாணவியர் கலந்து கொண்டு மாணவர் பிரிவு தடகளப் போட்டியில் 89 புள்ளிகள் பெற்று, ஒட்டுமொத்த சாம்பியன்சிப் பட்டம் வென்று சாதனை படைத்தனர். மேலும் மாணவர் ஹரிகிருஷ்ணன், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், ஈட்டி எறிதல் என அனைத்து போட்டிகளிலும் முதல் பரிசு வென்று ஒட்டுமொத்த தனிநபர் சாம்பியன்சிப் பட்டம் வென்றார். மாணவர் முகமது சல்மான் ஓட்டப் போட்டியில் முதலிடமும், குண்டு எறிதலில் மூன்றாமிடமும் வென்று ஒட்டுமொத்த தனிநபர் சாம்பியன்சிப் பட்டம் வென்றார். மாணவியர் பிரிவில் 116 புள்ளிகள் பெற்று, ஒட்டுமொத்த சாம்பியன்சிப் பட்டம் பெற்றனர். இது தொடர்ந்து 13 ஆண்டுகளாக ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்று வருகின்றனர். மாணவர் குழு விளையாட்டுப் போட்டிகளில் 87 புள்ளிகள் பெற்று ஒட்டுமொத்த சாம்பியன்சிப் பட்டம் வென்றனர். மேலும் இறகு பந்து போட்டியில் நடைபெற்ற 12 பிரிவுகளிலும் முதல் பரிசு வென்று பள்ளிக்குப் பெருமை சேர்த்தனர். சாம்பியன் சிப்பில் நான்கில் மூன்று பிரிவுகளில் ஒட்டுமொத்த சாம்பியன்சிப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்த மாணவ, மாணவிகளையும் அதற்கு உறுதுணையாக இருந்த உடற்கல்வி ஆசிரியர்களையும் பள்ளியின் தாளாளர் சிவசாமி, செயலாளர் சிவகாமி, இயக்குநர் சக்தி நந்தன், துணைச்செயலாளர் வைஷ்ணவி நந்தன் மற்றும் முதல்வர் வசந்தராஜ் ஆகியோர் பாராட்டினர்.


## homefirst We'll take you home — Home First Finance Company India Limited

CIN: L65990MH2010PLC240703,
Website: homefirstindia.com Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

### இணைப்பு–IV–A [விதி 8 (6)க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்)
### அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

**2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் கடன்தாரர்(கள்) மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் காலம் (ii)ன்படி, ஈடுபெற்ற கடன்தாரரிடம் அடமானம் வைக்கப்பட்ட காலம் (iii)ல் விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள், கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலுவை தொகை மற்றும் வட்டியை திரும்ப பெற அவை ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது மற்றும் அதேசமயம் நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியதன் விளைவாக, மேற்சொன்ன சட்டப்பிரிவு13(2)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழ்க்கையொப்பமிட்டவர் மேற்சொன்ன சொத்தை விற்பனை செய்வதன் மூலம் நிலுவையை தொகையை பெறலாம் என திட்டமிட்டுள்ளார். மேலும் இது இங்கு விவரிக்கப்பட்டுள்ளபடி "எங்கே எப்படி எவ்வாறு இருக்கிறது" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு காலம்(i)ல் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன்தாரர்(கள்)/உடன் கடன்தாரர்களிடமிருந்து திரும்ப பெற "ஆன்லைன்" மூலம் ஏலம் விடப்படும்.

| வ. எண். | கடன்தாரர்(கள்) மற்றும் உடன்கடன்தாரர்கள் பெயர் | சொத்து விவரங்கள் | டிமாண்ட் நோட்டீஸ் தேதி | டிமாண்ட் நோட்டீஸ் தொகை | சுவாதீனத் தேதி | சந்தை மதிப்பு | இஎம்டி தொகை (ரூ.) | மின்னணு ஏலத்தேதி மற்றும் நேரம் | இஎம்டி மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் | அங்கீகரிக் கப்பட்ட அதிகாரி எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிராஜுதீன் காஜாமைதீன் சௌரியாத் | பிளாட் – 62, எஸ்.எப்.எண்.423/1ஏ1, பட்டா எண்.773, மனை எண்.62, செந்தில் நகர், சிறுகிணறு கிராமம் மற்றும் பஞ்சாயத்து, தாராபுரம் சார் பதிவு அலுவலகம், தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு 638 706. எல்லைகள் : வடக்கில் மனை எண்.61, தெற்கில் மனை எண்.63, கிழக்கில் 30 அடி தெற்கு வடக்காக லேஅவுட் சாலை, மேற்கில் மனை எண்.75 | 04.07.2024 | 1,483,948 | 10.09.2024 | 1,400,000 | 140,000 | 14.10.2024 (காலை 11.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை) | 12.10.2024 (மாலை 5.00 மணி வரை) | 9786352214 |

| மின்னணு ஏல சேவை அளிப்பவர் | மின்னணு ஏல இணையதளம்/விவரங்கள், இதர விதி மற்றும் நிபந்தனைகள் | இஎம்டி/இதர தொகையை டெபாசிட் செய்ய கணக்கு எண். | கிளை IFSC Code | பயனாளி பெயர் |
|---|---|---|---|---|
| நிறுவனத்தின் பெயர்: இ–ப்ரோகியூர்மெண்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட் (Auction Tiger). ஹெல்ப் லைன் எண்: 079–35022160 / 149 / 182 தொடர்பு நபர்: ராம் சர்மா – 8000023297 மின்னஞ்சல் ஐடி: ramprasad@auctiontiger.net மற்றும் support@auctiontiger.net | http://www.homefirstindia.com https://homefirst.auctiontiger.net | 912020036268117–– ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் ஆக்சிஸ் வங்கி லிமிடெட், எம்ஐடிசி, அந்தேரி கிழக்கு | UTIB0000395 | அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் |

**ஏல அதிகரிப்பு தொகை – ரூ. 10,000/–.** வெப் போர்டல் (https://homefirst.auctiontiger.net) வழங்கப்பட்ட மின்னணு ஏல தளத்தின் மூலம் கீழ்க்கையொப்பமிடப்பட்டவரால் விற்பனை செய்யப்படும். ஆன்லைன் மின்னணு ஏல படிவம், அறிவிப்பு, ஆன்லைன் ஏல விற்பனையின் பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின்னணு ஏல டெண்டர் ஆவணம் போர்ட்டல் தளத்தில் கிடைக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த அளவில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கமும் இல்லை. எவ்வாறாயினும், ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர், சொத்துக்கள்/ஏலத்தில் வைக்கப்பட்ட உரிமைகள்/உரிமை கோரல்கள்/ நிலுவை தொகைகள்/சொத்துக்களைப் பாதிப்பது குறித்து ஏலதாரர்கள் தங்களது சொந்த சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ஹோம் பர்ஸ்ட்டின் எந்தவித பொறுப்பையும் மற்றும் பிரதிநிதித்துவத்தையும் மின்னணு ஏல விளம்பரம் அமைக்காது. ஹோம் பர்ஸ்ட்–டிற்கு அறியப்பட்ட அல்லது தெரியாத, தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் உள்ள அனைத்து வில்லங்கங்களுடன் இந்த சொத்து விற்கப்படுகிறது. எந்தவொரு மூன்றாம் தரப்பு உரிமை கோரல்கள்/உரிமைகள்/ நிலுவைத் தொகைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ ஈடுபெற்ற கடன் அளித்தவர் எந்த வகையிலும் பொறுப்பேற்க மாட்டார்கள். 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட விதிகள்/நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை இருக்கும்.

**சர்பாசி சட்டம், 2002ன் கீழ் சட்டப்பூர்வ 30 நாட்கள் விற்பனை அறிவிப்பு**

கடன்தாரர்/உத்தரவாததாரர்கள் மின்னணு ஏல தேதிக்கு முன்னதாக டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் நாளது தேதி வரையிலான வட்டி மற்றும் துணை செலவினங்களை செலுத்துமாறு அறிவிக்கப்படுகிறார்கள், அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் சொத்து ஏலம் விடப்படும்/விற்கப்படும் மற்றும் நிலுவைத் தொகை ஏதேனும் இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் மீட்டெடுக்கப்படும்.

தேதி: 13.09.2024
இடம்: கோயம்புத்தூர்

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்